பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆனி 28 | சனிக்கிழமை | 12.05.2025 | அதிர்வு 242

## இவ்வருடம் இதுவரை 37 பேர் சுட்டுக்கொலை



2025 ஆம் ஆண்டின் ஜன வரி மாதம் முத லாம் திகதியில் இருந்து

04



# வவுனியாவில் பொலிஸார் வெறியாட்டம்! குடும்பஸ்தர் ஒருவர் பரிதாப உயிரிழப்பு!!

## போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள்





(வவுனியா நிருபர்)

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் நேற்று இரவு போக்குவரத்துப் பொலிஸாரின் வெறியாட்டத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார். இதனால் கொதிப்படைந்த அந்தப் பகுதி மக்கள் பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டமையால் அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

03

# சர்வதேச நீதிப் பொறிமுறையை வலியுறுத்தி தமிழர் தாயகத்தில் 26ஆம் திகதி போராட்டம்

## வடக்கு - கிழக்கு சமூக இயக்கம் அழைப்பு

சர்வதேச நீதிப் பொறிமுறையை வலியுறுத்தி தமிழர் தாயகமான வடக்கு – கிழக்கில் எதிர்வரும் ஜுலை 26ஆம் திகதி பாரிய மக்கள் போராட்டத்தை மேற்கொள்ள அனைவரையும் ஒன்றிணையுமாறு வடக்கு – கிழக்கு சமூக இயக்கம் அழைப்பு விடுத்துள்ளது.

அந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா, பாதிக்கப்பட்ட உறவுகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சிவில் அமைப்புக்கள, வலிந்து காணாமல்

02




‘இனவழிப்புக்கு சான்றாதாரங்கள் செம்மணியில்; சுமந்திரன், சி.வி.கே. தெரிவிப்பு; ஜனாதிபதி அநுரவுக்குக் கடிதம்’ என்ற முற்பக்கத் தலைப்புச் செய்தியோடு நேற்று ‘மாலை முரசு’ வெளியான சற்று நேரத்தில் வெளிநாட்டு அன்பர் ஒருவர் அழைப்பு எடுத்தார்.

சுமந்திரனைக் கடுமையாக விமர்சிக்கும் அவர், ஒரு கேள்வி எழுப்பினார்.

“இனப்படுகொலை அல்லது இனவழிப்பு (Genocide) என்ற குற்றச்சாட்டை முன்வைப்பதற்கு சான்றாதாரங்கள் இல்லை என்ற சாரப்பட பேசி வந்த சுமந்திரன், இப்போது ஆதாரங்கள் இருக்கின்றன என்று குறிப்பிடுகின்றமையால் இனி இனவழிப்புக் குற்றச்சாட்டை முன் வைக்கலாம்தானே?” – என்று நையாண்டிப் பாணியில் ஒரு கேள்வி எழுப்பினார் அவர்.

நான் அவருக்கு ஒரு குட்டி ‘லெக்சர்’ வைத்தேன். அதை வாசகர்களோடும் பகிர்ந்து கொள்வது பொருத்தம் என்று நினைக்கிறேன். நான் கூறியவை இவைதான்:–

07





## பருத்தித்துறையில் நேற்று அதிகாலை

# மணல் கடத்தலில் ஈடுபட்ட டிப்பர் வாகனத்தை ஆணிக்கட்டைகள் வீசி மடக்கிய பொலிஸார்!

## தப்பியோட முயன்ற சாரதி கைது

(எஸ்.ரகுதீஸ்)

மணல் கடத்தலில் ஈடுபட்ட டிப்பர் வாகனத்தை ஆணிக்கட்டைகளை வீசி பருத்தித்துறைப் பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் பருத்தித்துறை – வல்லிபுரம் பகுதியில் இருந்து சட்டவிரோதமான முறையில் மணலை ஏற்றி வந்த டிப்பர் வாகனத்தை மந்திகை சந்திக்கு அருகில் கடமையில் இருந்து பொலிஸார் வழிமறித்த போது, டிப்பர் சாரதி வாகனத்தை நிறுத்தாது தொடர்ந்து பயணித்தார்.

அதையடுத்து டிப்பர் வாகனத்தைத் துரத்திச் சென்ற பொலிஸார் டிப்பர் வாகனத்தின் சில்லுக்கு ஆணிக்கட்டைகளை வீசினர். அதனால் சில்லின் காற்றுப் போனமையால், வாகனத்தைத் தொடர்ந்து செலுத்த முடியாது வாகனத்தைத் தம்பசிட்டி வீதியில் கைவிட்டு சாரதி தப்பியோட முயன்றபோது, அவரைப் பொலிஸார் மடக்கிப் பிடித்துக் கைது செய்தனர்.

சாரதியைப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்று தடுத்து வைத்த பொலிஸார், காற்றுப் போன சிலலைச் சரி செய்து டிப்பர் வாகனத்தையும் பொலிஸ் நிலையம் எடுத்துச் சென்றனர்.





## சர்வதேச நீதிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், ஊடகவியலாளர்கள் என அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

அந்த அழைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

“இலங்கையில் மனித குலத்துக்குதிராக இடம்பெற்ற வன்முறைகள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பாக எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமை பேரவையில் எடுக்கப்படும் இலங்கை தொடர்பான தீர்மானம் வலுப்பெறும் வகையில் மேற்கொள்ளப்படுவதற்கு மக்கள் போராட்டத்தை மேற்கொள்ள வேண்டிய சூழ் நிலைக்கு தமிழ் மக்களாகிய நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம்.

குறிப்பாக இலங்கை தொடர்பான விடயம் ஐ. நா. மனித உரிமை பேரவையில் நிகழ்ச்சி நிரலில் வைக்கப்பட்டு காலம் தோறும் புதுப்புது தீர்மானங்கள் இலங்கை அரசின் இணை அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டே செல்கின்றது. இற்றை வரை இதுதீர்மானங்கள் ஊடாக குறிப்பாக வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எந்த நன்மைகளும் கிடைத்ததில்லை.

இவ்வாறாணதொரு சூழ்நிலையில் இலங்கையின் அரசியல், பொருளாதாரம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான விடயங்களை அவதானிப்பதற்காக அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த ஐ.நா.மனித உரிமை உயர்ஸ்தாணிகரின் வருகை பின்னர் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் எமது தமிழ் மக்களின் தொடர்ச்சியான பிரச்சினைகளுக்கான தீர்வை வழங்கக் கூடிய ஆரோக்கியமான விடயங்கள் உள்ளடக்கப்படவில்லை என்பதை இட்டு வருத்தப்படுகின் றோம்.

அத்துடன் அண்மையில் ஐ.நா. சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதியால் ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய ஊடக நேர்காணல் கூட எமது மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுக்குரிய பொறிமுறையாக அமையாத நிலையை நாங்கள் ஊடக செய்திகள் ஊடாகப் பார்க்கின்றோம்.

இலங்கை அரசின் உள்ளகப் பொறிமுறை ஊடாக தமிழ் மக்களின் தீர்வு அமையப் போவதில்லை மாறாக சர்வதேச பொறிமுறைகள் ஊடாகவே தமிழ் மக்களுக்கான தீர்வுகள் எட்டப்பட வேண்டும் என்பதனை வலியுத்தி பல தடவைகள் இலங்கைக்கு உள்ளேயும், சர்வதேசத்திலும் கோரி வருகின்றோம்.

இந்நிலையில் ஐ. நா இலங்கை தொடர்பான பிரச்சினைகளுக்கு உள்ளகப் பொறிமுறைகள் ஊடகவே தீர்வை மேற்கொள்ள வேண்டும் எனும் கருத்தை தங்களது அறிக்கைகளிலும், ஊடக நேர்காணல்களிலும் குறிப்பிடுவதை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்நிலையில் தமிழ் மக்கள் தங்களுக்கான பிரச்சினைக்குரிய தீர்வு உள்நாட்டு பொறிமுறையை கடந்து சர்வதேச நீதிப் பொறிமுறையின் ஊடாக கிடைக்க வேண்டும் என்பதனை மீள வலியுறுத்தி எதிர்வரும் ஜுலை 26ஆம் திகதி வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் பாரிய மக்கள் போராட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்ய எண்ணியுள்ளோம்.

எனவே, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க அனைவரின் பங்களிப்பை வழங்குமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.” – என்றுள்ளது.








## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

நேற்று இரவு 10 மணியளவில் வவுனியா, கூமாங்குளம் மதுபான விற்பனை நிலையம் அமைந்துள்ள வீதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் பொலிஸார் வந்தனர்.

இதன்போது அந்த வீதியால் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த நபர் ஒருவரை அவர்கள் துரத்திச் சென்றதுடன் மோட்டார் சைக்கிள் சில்லுக்குள் தடியொன்றை வீசித் தடையை ஏற்படுத்தினர்.

இதனால் நிலைதடுமாறி கீழே வீழ்ந்த மேற்படி நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதனை அவதானித்த மக்கள் ஆத்திரமடைந்து பொலிஸாரின் இரண்டு மோட்டார் சைக்கிள்களையும், ஒரு வாகனத்தையும் சேதப்படுத்தினர்.

பொலிஸாரின் இந்தக் கொலை வெறியாட்டத்துக்கு நீதி கிடைக்க வேண்டும் என மக்கள் தெரிவித்ததுடன் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை நீண்ட நேரமாகச் சிறைப்பிடித்து வைத்தனர். இதனால் அந்தப் பகுதியில் குழப்ப நிலை ஏற்பட்டது.

உயிரிழந்தவரின் சடலத்தைப் பொலிஸார் அங்கிருந்து அகற்றுவதற்கு மறுப்புத் தெரிவித்த மக்கள், "நீதிவான் இங்கு வரவேண்டும். அவர் வந்த பின்னரே சடலத்தை அகற்ற அனுமதிப்போம்." என்று தெரிவித்தனர்.

இதனால் பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

மக்களின் கொதிப்பால் தடுமாறிய பொலிஸார் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறினர்.

இந்நிலையில் வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சம்பவ இடத்துக்கு வருகை தந்து, இந்த மரணத்தைக் கொலை வழக்காகப் பதிவு செய்து அதனுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை விசாரிப்பதாகத் தெரிவித்ததுடன், சடலத்தை அகற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அங்கு நின்ற மக்களிடம் கேட்டுக்கொண்டார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த மக்கள், "பொலிஸார் மீது எமக்கு நம்பிக்கை இல்லை. நீதிவான் இங்கு வரவேண்டும்" என்று விடாப்பிடியாக நின்றனர் .

இதனால் அந்தப் பகுதியில் பெரும் கலவரம் ஏற்படுவதற்கான நிலைமை ஏற்பட்டது.

இதையடுத்துத் திடீர் மரண விசாரணை அதிகாரி சம்பவ இடத்துக்கு வருகை தந்து மரணம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்தார்.

அதன்பின்னர் மக்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் சடலம் அந்தப் பகுதியில் இருந்து அகற்றப்பட்டு பொலிஸாரின் வாகனத்தில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் வவுனியா, கூமாங்குளம் பகுதியைச் சேர்ந்த இராமசாமி அந்தோனிப்பிள்ளை (வயது 58) என்ற குடும்பஸ்தர் என்று தெரியவந்துள்ளது.

அவரது சடலத்துக்கு அருகில் மக்கள் சிறைப்பிடித்து வைத்திருந்த பொலிஸ் உத்தியோகத்தரின் பெயர் பொறிக்கப்பட்ட இலட்சினை ஒன்றும் காணப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தால் அந்தப் பகுதியில் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டதுடன் விசேட அதிரடிப் படையினர், கலகத் தடுப்புப் பொலிஸாரும் களமிறக்கப்பட்டிருந்தனர்.




# சுற்றுலா சென்ற நபர் நீரில் மூழ்கி மரணம்!



பதுளை – மஹியங்கனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நெலுவ வாவியில் நீராடிக்கொண்டிருந்த நபர் ஒருவர் திடீரென நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

பண்டாரவளை பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

மேற்படி நபர் நண்பர்களுடன் இணைந்து பண்டாரவளையில் இருந்து மஹியங்கனை நோக்கி சுற்றுலாவுக்குச் சென்றுள்ள நிலையில் நெலுவ வாவியில் நீராடிக் கொண்டிருந்த போது நீரில் மூழ்கியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பின்னர் நண்பர்கள் அனைவரும் இணைந்து நீரில் மூழ்கியவரைக் காப்பாற்றி வைத்தியசாலையில் அனுமதித்த பின்னர் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹியங்கனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இவ் வருடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜுலை மாதம் 11 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் நாட்டில் 66 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களினால் 37 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும், 37 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவற்றில் 48 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பாதாள உலகக் கும்பல்களுக்கு இடையிலான மோதல்கள் காரணமாக இடம்பெற்றுள்ளன என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் பாணந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மாத்திரம் சுமார் ஐந்து துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்தவர்களும் போதைப்பொருள் கடத்தல்காரர்களுமான “குடு சலிந்து” மற்றும் “பாணந்துறை நிலங்க” ஆகியோருக்கு இடையிலான தகராறு காரணமாக பாணந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் அதிகளவான துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.




# கொடிகாமம் கண்ணகை அம்பாள் சித்திரத் தேர் வெள்ளோட்டம் இன்று

கொயிலாமனை - கொடிகாமம் அருள்மிகு கண்ணகை அம்பாள் வீரபத்திரர் ஆலய சித்திரத் தேர் வெள்ளோட்டம் இன்று மாலை இடம்பெற உள்ளது.

கொயிலாமனை – கொடிகாமம் அருள்மிகு கண்ணகை அம்பாள் வீரபத்திரர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 05ஆம் திகதி ஆரம்பமாகி இடம் பெற்று வருகிறது.

பத்து தினங்கள் உற்சவம் இடம்பெற உள்ள நிலையில் இன்றைய தினம் சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம் இடம்பெற உள்ளது.

தொடர்ந்து மாலை 6.00 மணிக்கு சப்பைரத திருவிழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர் உற்சவமும் நாளை மறுதினம் திங்கள் கிழமை காலை 10.00 மணிக்கு தீர்த்த உற்சவம் இடம்பெற்று அலங்கார உற்சவ திருவிழா நிறைவடைய உள்ளது.

# வீடு ஒன்றில் இருந்து ஆண் ஒருவரின் சடலம்

சிறுப்பிட்டி வடக்கு நீர்வேலிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று வெள்ளிக்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீக்கப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த இராமச்சந்திரன் ஜெயகாந்தன் (வயது 40) என்ற ஆணாவார்.

தந்தையுடன் வீட்டில் இருந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டவர் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். சாட்சிகளை அச்சுவேலிப் பொலிஸார் நெறிப்படுத்தினர்.



# மடிகணினிகள் அன்பளிப்பு







யா/வல்வை சிவகுரு வித்தியாசாலையின் பழைய மாணவர்களும் வல்வை உதயசூரியன் கழக உறுப்பினர்களுமான வல்வெட்டித்துறையைச் சேர்ந்த நோர்வே வாழ் சாந்தமுரளி பாலராணி தம்பதியர் தமது பாடசாலை மாணவர்களின் தகவல் தொழில் நுட்ப கல்விவளர்ச்சிக்காக 10 மடிகணினிகளை அன்பளிப்பாக வழங்கி வைத்துள்ளனர்.

இவ்வாறு அன்பளிப்பாக வழங்கப்பட்ட 10 மடிகணினிகள், வலயக்கல்விப் பணிமனை தகவல் தொழில் நுட்ப அதிகாரிகள் முன்னிலையில் சிவகுரு வித்தியாசாலை அதிபரிடம் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை மேற்படி குடும்பத்தாரினால் கையளிக்கப்பட்டுள்ளன.



# வரிச் சலுகைகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

வெள்ளை மாளிகையுடன் நேரடியான தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு, அமெரிக்கா விதித்துள்ள வரிச் சலுகைகளை இன்னும் குறைந்த மட்டத்தில் பெறுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, இலங்கைக்கான தீர்வை வரியை 44 சதவீதத்தில் இருந்து 30 சதவீதமாகக் ஆகக் குறைத்தமை சிறந்ததொரு விடயம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர், இலங்கையின் ஏற்றுமதிகளில் 26.4 சதவீத பங்களிப்பைப் பெற்றுத் தரும் நாடாக அமெரிக்கா திகழ்ந்து வருவதாக குறிப்பிட்டார்.

ஆடைத்துறையில் 60 சதவீத ஏற்றுமதி நாடாகவும் அமெரிக்கா இருந்து வருகிறது.

எனினும், ஏற்றுமதி போட்டியாளர்களாக இருந்து வரும் நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கை பெற்ற வரிச் சலுகை நியாயமானதா? என்பது தொடர்பில் ஆராய வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.




## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுமந்திரன் கூறிய விடயங்களைத் தவறாகப் புரிந்து கொண்டுள்ள பலரில் நீங்களும் ஒருவர் என்பதை அறிவேன். இப்போதும் கூட உங்களுடைய புரிதல் அப்படித்தான் இருக்கின்றது.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இனப்படுகொலைநடக்கவில்லைஎன்றோ, இனவழிப்பு மேற்கொள்ளப்படவில்லை என்றோ அல்லது அவற்றுக்கு சான்றாதாரங்கள் இல்லை என்றோ சுமந்திரன் எப்போதும் கூறவில்லை. சுமந்திரன் கூறிய விடயங்கள் சட்டரீதியான சில அடிப்படைகளைக் கொண்டவை. அவற்றைப் புரிந்து கொள்வது நல்லது.

யுத்தத்தின் போது அதிகாரத் தரப்புகள் மேற்கொள்ளும் குற்றங்கள் பல வகையானவை.

போர்க் குற்றங்கள், துன்புறுத்தல்கள் போன்றவை ஒரு வகையின.

சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறுதல், படுகொலை, சித்திரவதை, துன்புறுத்தல், சிவிலியன்கள் மீதான தாக்குதல்கள், தடை செய்யப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்துதல், சிவிலியன்களைப் பணயம் வைத்தல், பாலியல் வன்முறைகள், வல்லுறவு, பொது மற்றும் தனியார் சொத்துக்களை அழித்தல், நாசப்படுத்துதல், சிறுவர்களைப் படைக்குச் சேர்த்தல், சிவிலியன்களைப் பலவந்தப் படுத்தி அவர்களை வாழும் இடங்களில் இருந்து அகற்றுதல், சிவிலியன்களுக்கான மருந்து, உணவு, தண்ணீர் போன்ற விநியோகங்களைத் தடுத்து அவர்களை பட்டினி போடுவது, சித்திரவதை செய்வது, கலாசார மையங்களை தாக்குவது போன்று பல குற்றச்சாட்டுகள் உள்ளன.

இவற்றைப் பொறுத்தவரை இந்தச் சம்பவங்கள் நடைபெற்றன என்பதை நிரூபித்தால் போதும். அந்தக் குற்றங்கள் இழைக்கப்பட்டமை உறுதியாகிவிடும்.

ஆனால் இனவழிப்பு அல்லது இனப்படுகொலை என்ற குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கு, அதைப் புரிந்த தரப்புக்கு அல்லது தலைமைக்கு அந்த இலக்கு எண்ணம் **(Intention)** இருந்தது என்பதை நிரூபிக்க வேண்டும். அது சட்டரீதியில் சிக்கலான விடயம்.

கடந்த 75 ஆண்டுகளாக நாட்டுக்கு தலைமை வகித்த – படைகளை வழி நடத்திய – தலைவர்கள், அதிகாரிகள் மற்றும் தரப்பினருக்கு அத்தகைய இனவழிப்பு என்ற குற்ற இலக்கு நோக்கம் இருந்தது என்பதை நிரூபிப்பது மிக சிக்கலான விடயம். அதற்கான சான்றாதாரங்கள் தேவை என்பதைத்தான் சுமந்திரன் போன்ற சர்வதேச சட்டங்களைப் புரிந்து கொண்டவர்கள் வலியுறுத்துகிறார்கள்.

இலங்கை தொடர்பான விடயங்களைக் கையாளுகின்ற சர்வதேச மனித உரிமை தரப்புகள் மற்றும் நிபுணர்கள் போன்றோர் இதுவரை காலமும் இலங்கைத் தமிழருக்கு எதிராக இழைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் காட்டமான அறிக்கைகளை வெளியிட்ட போதிலும், அவற்றில் எல்லாம் யுத்தக் குற்றங்கள் பற்றியும், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் பற்றியும் மட்டுமே விவரித்து இருக்கின்றார்கள் தவிர, இனவழிப்பு பற்றிக் குறிப்பிடவில்லை. அதை நிரூபிக்கத் தேவையான சில விடயங்கள் – காரணிகள் – இன்னும் கண்டறியப்பட வேண்டும் என்பது அவர்களது கருத்தாக இருந்து வருகிறது.

இப்போதும் கூட தமிழர் தரப்பில் யாரும் இனவழிப்பு – இனப் படுகொலை – நிகழவில்லை என்ற நிலைப்பாட்டை எடுக்கவில்லை – சுமந்திரன் உட்பட.

எடுத்த எடுப்பில் நிரூபிக்க கஷ்டமான விடயத்தை முன்நிறுத்தி, சூடான் விவகாரத்தில் இடம் பெற்றமை போன்ற பின்னடைவை சந்திக்காமல் தவிர்ப்பது நல்லது. முதல் கட்டமாக போர் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான ஏனைய கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்ற விடயங்களை நிரூபித்து, அதன் பெயரில் இலங்கை அரசை – படைத் தரப்புகளை – குற்றவாளி கூண்டில் நிறுத்திக் கொண்டு, இனவழிப்பு அல்லது இனப் படுகொலை விவகாரத்துக்குள் அடுத்த கட்டமாக நுழையலாம் என்பதுதான் சர்வதேச மனித உரிமைகள் ஆர்வலர்கள் போன்ற ஆலோசகர்களின் கருத்தாக இருந்து வருகிறது. அதனை சுமந்திரனும் ஒரு சட்டத்தரணியாகக் கோடி காட்டி வந்தார்.

இப்போதும் கூட தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானமும், கட்சியின் செயலாளர் சுமந்திரனும் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் கூட இந்த மனிதப் புதைகுழி விடயங்கள் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர் குற்றங்களையும் இனவழிப்பு முயற்சிகளையும் வெளிப்படுத்தும் தெளிவான ஆதாரங்களாகும் என்று குறிப்பிட்டு, இலங்கை அரசானது தனது இந்தத் தமிழர் விரோதக் கொடும் வரலாற்றை முழுமையாக ஏற்றுக் கொள்வது அவசியம் என்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

ஜனாதிபதிக்கு எழுதிய அக்கடிதத்தின் அந்தப் பந்தியின் படி பார்த்தால் –

போர் குற்றங்கள் மற்றும் இன அழிப்பு முயற்சிகளுக்கான ஆதாரங்கள் பற்றி முதலிலும், அரசின் தமிழர் விரோத கொடும் வரலாறு பற்றி குறிப்பிடுவதன் மூலம் அந்த குற்ற இலக்கு நோக்கம் ஆட்சித் தரப்புக்கு இருந்து வந்ததை அடுத்தும் அவர்கள் கோடி காட்டுகிறார்கள் என்பதையும் கவனிக்கலாம்.

இப்போதும் கூட இனவழிப்புக்கான ஆதாரங்களில் மேலதிகமான ஒன்றாக செம்மணி புதைகுழி விடயம் மாறி வருகிறது, ஆனால், இது, ஆட்சித் தலைமையின் அல்லது அரச வழிகாட்டிகளின் குற்ற இலக்கு நோக்கத்தை சர்வதேச நீதிமன்றம் ஒன்றில் நிரூபிக்கப் போதுமானதா என்பது தெரியவில்லை.

இப்படி அந்த அன்பருக்கு நேற்றிரவு நான் தெளிவு படுத்தினேன். அது அவருக்கு புரிந்ததோ என்னவோ...! வாசகர்களே உங்களுக்காவது இப்போது புரிந்ததா...?

* * *

திருகோணமலையின் முதலாவது மேயர் கந்தசாமி செல்வராஜா (சுப்ரா) இப்போது முன்னெடுத்த நடவடிக்கை ஒன்று திருகோணமலையில் தமிழர் தரப்புக்கள் பலவற்றின் மத்தியிலும் பெருத்த சலசலப்பையும் எரிச்சலையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

திருகோணமலையின் முதலாவது மேயராக அவரது பெயரை தமிழரசுக் கட்சியின் தலைமை பரிந்துரைத்த போதே பெரும் ஆட்சேபனைகளும் எதிர்ப்பு அலைகளும் திருகோணமலையில் எழுந்தன என்பது தெரிந்ததே.

இதற்கு முன்னர் கடைசியாக இருந்த – தேர்ந்தெடுக்கப்பட்ட – நகரசபையில் நகர



பிதாவாக இருந்தவர் இதே சுப்ராதான்.

அப்போது – கடைசிக் கட்டத்தில் – நகர சபை முன்னெடுத்த பூங்கா அபிவிருத்தி மற்றும் ஊழியர்கள் பதவிக்கு ஆள் சேர்ப்பு போன்ற விடயங்களில் பெரும் குளறுபடிகள் இருந்தன எனப் பேச்சு அடிபட்டது.

அதே நபர் மீண்டும் மாநகரத் தலைவராக வந்தால் இப்போதைய தேசிய மக்கள் சக்தி அரசு பழைய கோவைகளைக் கிளறி எடுத்து தமிழரசுக்கு எதிராக அதைப் பாணமாகப் பயன்படுத்தும் என்று பேசப்பட்டது. ஏற்கனவே அத்தகைய கோவைகள் ஆளுநரின் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டு விட்டன என்ற பேச்சும் திருகோணமலையில் உண்டு.

இந்தப் பின்புலத்தில்தான் கிழக்கு மாகாண ஆளுநரையும் மாகாண பிரதம செயலாளரையும் திருகோணமலை மேயர் சுப்ரா நேரில் சென்று சந்தித்திருக்கிறார்.

புதிதாக தெரிவு செய்யப்பட்ட மேயர் தமது பணி நிமித்தம் ஆளுநரையும் பிரதம செயலாளரையும் சந்திப்பது மரியாதை நடவடிக்கைதான் என்றாலும் கூட, திருகோணமலைக் கள நிலைவரத்தைப் புரிந்து கொள்ளாமல் சுப்ரா நடந்து கொண்டாரா என்று ஒரு கேள்வி எழுகின்றது.

சிங்களமயமாக்கல், பௌத்த – சிங்கள மேலதிகாரத்தை நிலை நிறுத்தி அடையாளப்படுத்துதல் போன்றவற்றுக்குப் பொதுவாக பேரினவாதிகளினால் பயன்படுத்தப்படுவது புத்தர் சிலைதான். அதுவும் பேரினவாத மேலாதிக்கத்தினால் அதிகம் பாதிக்கப்பட்ட திருகோணமலையில் இந்த புத்தர் சிலை பற்றிய பட்டறிவு மக்களுக்கு அதிகம் உண்டு. குறியீட்டு ரீதியான – உணர்வுபூர்வமான – விடயம் புத்தர் சிலையில் தொக்கி நிற்பது தமிழர்கள் நன்கு புரிந்து கொண்ட விவகாரம் தான்.

கிழக்கு மாகாண ஆளுநரையும் பிரதம செயலாளரையும் சந்திக்கச் சென்ற மேயர் சுப்ரா, அவர்களுக்கான நினைவுப் பரிசாக புத்தர் சிலைகளைக் கையளித்தமை, அந்தச் சிலை வழமையாக திருகோணமலை மக்களுக்கு கொடுக்கும் செய்தியின் உள்பரிமாணத்தின் அடிப்



படையில் நோக்கப்படுகின்றது.

புத்தர் சிலை கொடுத்துத் தாஜா பண்ணினாலும், பழைய கோவைகள் மூடப்பட்டு விடமாட்டா என்று இப்போது திருகோணமலையில் ஸ்திரமாகக் காலூன்றி இருக்கும் தேசிய மக்கள் சக்தியின் வட்டாரம் ஒன்று உறுதியாகத் தெரிவித்தது.

எல்லாப் புகழும் இறைவனுக்கே என்பது வழமையான பேச்சு.

ஆனால் சுப்ராவை மேயராக்கும் முடிவை முன்னின்று எடுத்த தரப்புக்கள் மீது கோபமாக இருக்கும் சில திருகோணமலைப் பிரமுகர்கள் 'எல்லாப் புகழும் குகதாசனுக்கே!' என்று கூறுகிறார்கள். இன்னொரு தரப்பினரோ 'எல்லாப் புகழும் சுமந்திரனுக்கே!' என்று முகப் புத்தகங்களில் எழுதி வருகிறார்கள்.

கடைசியில் பார்த்தால் எல்லா இகழும்

# திறன் கொண்ட குடிமகனை உருவாக்குவதன் அடிப்படை அடித்தளமே கல்வி சீர்திருத்தம்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவிப்பு



21ஆம் நூற்றாண்டு மற்றும் அதற்கு அப்பால் ஏற்படக்கூடிய சவால்களை எதிர்கொள்ளும் திறன் கொண்ட குடி மகனை உருவாக்குவதற்கான, அடிப் படை அடித்தளத்தை அமைப்பது புதிய கல்வி சீர்திருத்தங்களின் முக்கிய நோக் கம் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று உரை யாற்றிய போதே அவர் இதனைக் கூறி யுள்ளார்.

புதிய கல்வி சீர்திருத்தத்தின் ஊடாக உருவாக்கப்படும் பிரஜை, நாட்டின் நிலை யான தேசிய அபிவிருத்தி மற்றும் சமா தானச் செயன்முறைக்கு, பங்களிப்பா ளராக செயற்படுவார் எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

புதிய சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதன் நோக்கங்கள், இலக்குகள், சீர்திருத்தங்களுக்கான வழிகாட்டும் கொள்கைகள், சீர்திருத்தங்களைச் செயல்படுத்தும் நடைமுறைகள் மற்றும் ஆசிரியர் பயிற்சி போன்ற அடிப்படை விடயங்கள் தொடர்பில் நேற்றைய நாடா ளுமன்ற அமர்வின் போது பிரதமரால் விளக்கமளிக்கப்பட்டது.

# மேர்வின் சில்வாவுக்கு எதிரான வழக்கு மீண்டும் விசாரணைக்கு வருகின்றது

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிரான வழக்கை எதிர்வரும் 28 ஆம் திகதியன்று விசாரணை செய்வதற்கு கொழும்பு மேல் நீதிமன்றம் திட்டமிட்டுள்ளது.

தனது சட்டப்பூர்வ வருமானத்திற்கு அப்பால் மில்லியன் கணக்கான ரூபா மதிப்புள்ள சொத்துக்கள், வாகனங்கள் மற்றும் வங்கிக் கணக்குகளைச் சேகரித்த குற்றச்சாட்டு அவர் மீது சுமத்தப்பட்டுள்ளது.

லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் மேர்வின் சில்வா, அமைச்சரவை அமைச்சராக இருந்த காலத்தில் 2020 மார்ச் 31 ஆம் திகதி முதல் 2012 மார்ச் 31 ஆம் திகதி வரை சொகுசு வாகனங்கள், காணிகள் மற்றும் பிற மதிப்புள்ள சொத்துக்களை அவர் கொள்வனவு செய்துள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த கையகப்படுத்துதல்களை அவரது உத்தியோ பூர்வ சம்பளம் மற்றும் வருமானத்தின் மூலம் செய்திருக்க முடியாது என்று அரசு தரப்பு வாதிடுகிறது.



முன்னதாக இந்த குற்றச்சாட்டு தொடர்பில் விளக்கமறிய லில் வைக்கப்பட்டிருந்த மேர்வின் சில்வா, 2025 ஜூன் 6ஆம் திகதியன்று பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

# பிரித்தானிய பல்கலைக்கழகத்தில் கற்க இலங்கையர்களுக்கு புலமை பரிசில்



ஐக்கிய இராச்சியத்தின் செவனிங் புல மைப்பரிசில் திட்டத்துக்கான விண்ணப் பங்களை ஏற்றுக்கொள்வதாக இலங்கை யில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானி கராலயம் அறிவித்துள்ளது.

அத்துடன், இந்த புலமைப்பரிசில் திட்டத்தில் ஆர்வமுள்ள மாணவர்கள் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக் குமாறு உயர்ஸ்தானிகராலயம் கேட் டுள்ளது.

2025 ஆகஸ்ட் 5 முதல் ஒக்ரோபர் 07 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள் ளது.

செவனிங் உதவித்தொகை திட்டம் எந்தவொரு இங்கிலாந்து பல்கலைக் கழகத்திலும், எந்தவொரு முதுகலைப் படிப்பையும் மேற்கொள்ள முழு நிதியுத வியுடன் கூடிய நிதியுதவிகளை வழங்கு கிறது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஒன்று மூட, மற்றது திறக்கும்!

இறைவன் ஒரு கதவை அடைத்தாலும் இன்னொரு வழியைத் திறந்து விடுவான் என்பது பொதுவான நம்பிக்கை. இப்போது ஏற்படக்கூடிய பொருளாதார நெருக்கடியிலும் அது தென்படுகின்றது.

இலங்கையில் இருந்து தனது நாட்டுக்கு ஏற்றுமதியாகும் பொருள்களுக்கான கதவை தன்னுடைய வரி விதிப்பு மூலம் அமெரிக்கா கெடுபிடி பண்ணி இறுக்க, மறுபுறத்தில் இலங்கைக்கான கெடுபிடிகளைத் தளர்த்தி, வாய்ப்புகளை அதிகரிக்கக் கூடிய இடம் அளிக்க பிரிட்டன் முன் வந்திருப்பதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன.

இலங்கையின் ஏற்றுமதியில் சுமார் 26.4 வீதம் அமெரிக்காவுக்கு மேற்கொள்ளப்படுகின்றது. அதே சமயம் இலங்கையின் ஆடை துறை ஏற்றுமதியில் 60 வீதம் அமெரிக்காவுக்குச் செல்கின்றது.

இப்படி இலங்கையிலிருந்து பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கான வரியை முதலில் 44 வீதம் என அறிவித்த அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், இப்போது ஏதோ சகாயம் செய்பவர் போல அதனை 30 வீதமாகக் குறைத்து அறிவித்திருக்கிறார். இது இப்போது நடைமுறையில் இருக்கும் வரிகளுக்கு மேலதிகமான வரி விதிப்பாகும்.

ஆனால் உலகின் பிற நாடுகளோடு போட்டி போட்டு இந்தப் பொருள்களை அமெரிக்காவுக்கு இலங்கை ஏற்றுமதி செய்வதால், அந்த நாடுகளுக்கு இந்த பொருள்கள் தொடர்பில் அமெரிக்கா விதித்துள்ள வரி கவனிக்கப்பட வேண்டும்.

ஜப்பான், மால்டோவா, புருணை, தென்கொரியா மற்றும் கஜகஸ்தான் போன்ற நாடுகளுக்கு 25 வீதமும் இந்தியாவுக்கு 26 வீதமும் இந்த பொருள்களுக்கு அமெரிக்கா வரி விதித்துள்ளது. இந்தியா, வங்காளதேசம் போன்ற நாடுகளோடு இப்பொருள்களை போட்டி போட்டு அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் இலங்கை, இவ்விடயத்தில் ஆகக்கூடிய வரி விதிப்பை எதிர்கொள்வதால் அதன் ஏற்றுமதி பெருமளவில் பாதிக்கப்படும் என்பது திண்ணம்.

ஆனால், மறுபுறத்தில் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் அதிகமான ஆடைகளை வரிக் கட்டணம் இன்றி இங்கிலாந்துக்குள் நுழைய அனுமதிக்கும் தாராளமயமாக்கப்பட்ட மூலவிதிகளை இப்போது பிரிட்டன் அறிவித்திருப்பதாக கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த முடிவு இலங்கையில் ஆடை உற்பத்தித் துறைக்கும் அந்த ஆடைகளை இங்கிலாந்தில் நுகர்வோருக்கும் கிடைத்த வெற்றி என்று இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் அன்ட்ரூ பட்ரிக் தெரிவித்திருக்கிறார்.

இலங்கையைப் பொறுத்தவரை அதன் ஏற்றுமதி துறையில் இரண்டாவது பெரிய சந்தை பிரிட்டன். அப்படி ஏற்றுமதி செய்யும் வர்த்தகத்தில் அறுபது வீதத்துக்கும் அதிகமானவை ஆடைகளாகவும் இருப்பதால் இலங்கையில் உள்ள ஏற்றுமதி உற்பத்தியாளர்கள் பிரிட்டனின் அறிவிப்பை வரவேற்பார்கள் என்பது எங்களுக்கு தெரியும் என தூதுவர் மேலும் குறிப்பிட்டு இருக்கிறார்.

உண்மைதான். அமெரிக்கா தனக்கு இலங்கை ஏற்றுமதி செய்யும் பொருள்கள் தொடர்பில் இலங்கையுடன் போட்டியிடும் ஏனைய நாடுகளுக்குக் குறைந்த வரியை விதிப்பதன் மூலம் இலங்கையின் ஏற்றுமதி சந்தைக்குக் கதவு அடைக்க முயலும் அதேசமயம், அந்த ஏற்றுமதிகளை தனது நாட்டுக்குள் வரவேற்க தனது கதவை அகல திறக்கின்றது பிரிட்டன்.

இந்தச் சமயத்தில் பிரிட்டனின் இந்த முடிவு இலங்கைக்கு பெருமூச்சு விட வாய்ப்பளிக்கும் - ஆதரவளிக்கும் - ஒரு நடவடிக்கை என்பதை இலங்கை நன்றியோடு நினைவு கூர வேண்டும்.

# காங்கிரஸ் உருவாக்கிய பொதுத் துறைகளில் 23 நிறுவனங்களை மோடி விற்றுவிட்டார்

## மல்லிகார்ஜுன கார்கே குற்றச்சாட்டு



நாட்டில் காங்கிரஸ் உருவாக்கிய 160 பொதுத் துறை நிறுவனங்களில், 23 நிறுவனங்களை மோடி அரசாங்கம் விற்றுவிட்டது என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றம் சாட்டியுள்ளார்.

ஒடிசா தலைநகர் புவனேஸ்வரில் நடைபெற்ற காங்கிரஸ் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய மல்லிகார்ஜுன கார்கே, "மத்தியிலும் ஒடிசாவிலும் காங்கிரஸ் அரசு ஆட்சியில் இருந்தபோது, இங்கு பல வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. என்.டி.பி.சி, நால்கோ, பாரதீப் துறைமுகம், ஹிராகுட் அணை, ரூர்கேலா எஃகு ஆலை, சில்கா கடற்படை அகாடமி, மஞ்சேஸ்வரில் ரயில் பெட்டி தொழிற்சாலை ஆகியவை காங்கிரஸ் அரசு ஒடிசாவுக்குச் செய்த திட்டங்களில் முக்கியமானவை.

நேரு பிரதமராக இருந்தபோதுதான், புவனேஸ்வர் தலைநகராக மாற்றப்பட்டது. ஒடிசா மக்களுக்கு நரேந்திர மோடி என்ன செய்துள்ளார்? ஒடிசாவுக்கு பா.ஜ.கவின் பங்களிப்பு பூஜ்ஜியம். காங்கிரஸ் ஒடிசா மக்களுக்காக உழைத்தது. அதனால்தான் இன்று பல பெரிய பொதுத் துறை நிறுவனங்கள் ஒடிசாவுக்கு கிடைத்துள்ளன. ஆனால், நரேந்திர மோடி எதையும் செய்யவில்லை. மாறாக, காங்கிரஸ் கட்சி உருவாக்கியதையும், மக்கள் கட்டியெழுப்பியதையும் மோடி விற்றுக் கொண்டிருக்கிறார்.

விமான நிலையங்கள், சுரங்கங்கள், காடுகள், நிலம், நீர் என அனைத்தும் தனியாருக்கு விற்கப்படுகின்றன. பணிகளைச் செய்து அதன் பலன்களைக் காட்டியவர்கள் நாங்கள். ஒடிசாவின் முன்னேற்றத்துக்கும் மேம்பாட்டுக்கும் காங்கிரஸ் எண்ணற்ற பணிகளைச் செய்துள்ளது. காங்கிரஸ் நாட்டில் 160 பொதுத் துறை நிறுவனங்களை உருவாக்கியது. அவற்றில் 23 பொதுத் துறை நிறுவனங்களை மோடி அரசாங்கம் விற்றுவிட்டது. நரேந்திர மோடி இதைத்தான் செய்கிறார். அவருக்கு பாடம் கற்பிக்க வேண்டியது அவசியம். ஒடிசா மக்கள் காங்கிரஸை வெற்றி பெறச் செய்தால், நாடு முழுவதும் காங்கிரஸ் அரசு அமையும்.

நாட்டின் அரசமைப்பை அழிக்க வேண்டும் என்பதே நரேந்திர மோடியின் திட்டம். பா.ஜ.க. 400 தொகுதிகளில் வெற்றி பெற்றுவிட்டால், அவர்கள் அரசமைப்புச் சட்டத்தை மாற்றிவிடுவார்கள். அரசமைப்புச் சட்டம் ஒழிக்கப்பட்டால், மக்களின் வாக்குரிமை பறிக்கப்படும். மகாராஷ்டிராவில் அமைக்கப்பட்டுள்ள அரசாங்கம் திருடர்களின் அரசாங்கம். அதையே பிஹாரிலும் செய்ய அவர்கள் முயல்கிறார்கள். இந்த நிலை நீடித்தால் நாட்டில் ஜனநாயகம் நிலைக்காது. எனவே, அவர்களை நாம் அதிகாரத்திலிருந்து அகற்ற வேண்டும்." என்றார்.

# பிரதமர் நரேந்திர மோடி தமிழகத்துக்கு விஜயம்



பிரதமர் நரேந்திர மோடி 2 நாள்கள் பயணமாக ஜூலை 27, 28 ஆம் திகதிகளில் தமிழகத்துக்கு விஜயம் மேற்கொள்கின்றார். அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரத்தில் நடைபெறும் ஆடி திருவாதிரை விழா மற்றும் பெரம்பலூர், தஞ்சாவூரில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க உள்ளார்.

அ.தி.மு.கவுடன் கூட்டணி வைத்துள்ள பா.ஜ.க, 2026 சட்டப்பேரவை தேர்தலில் அதிக இடங்களை கைப்பற்ற வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறது. அண்மையில் பா.ஜ.க. முன்னெடுப்பில் மதுரையில் முருகர் பக்தர்கள் மாநாடு நடைபெற்றது.

இந்நிலையில், அதேபோன்ற ஆன்மிக நிகழ்ச்சியை பிரம்மாண்டமாக நடத்த பா.ஜ.க. திட்டமிட்டுள்ளது.

அதன்படி, அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரத்தில் ஆடித்திருவாதிரை விழாவை இந்தாண்டு சிறப்பாக நடத்த பா.ஜ.க. திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

ராஜேந்திர சோழனின் பிறந்த நாளை நிகழாண்டு இந்திய கலாச்சார துறை சார்பில் 5 நாள் விழாவாக கொண்டாட மத்திய அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, ராஜேந்திர சோழனின் பிறந்த நாளான ஜூலை 23 ஆம் திகதி மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் கஜேந்திரசிங் ஷகாவத் விழாவை தொடங்கி வைக்கிறார்.

நிறைவு நாளான ஜூலை 27 ஆம் திகதி நடைபெறும் திருவாசகம் மாநாட்டில், பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்க உள்ளதாகவும், அவர் கங்கைகொண்ட சோழபுரம் கோயில் பொறிக்கப்பட்ட நினைவு நாணயத்தை வெளியிட உள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. தொடர்ந்து, 28 ஆம் திகதி பெரம்பலூர், தஞ்சாவூரில் நடைபெறும் நிகழ்ச்சிகளிலும் பிரதமர் மோடி பங்கேற்கவுள்ளார் என தகவல்கள் வெளியாகி உள்ளன.

# தமிழகத்தில் இதுவரை நிபா வைரஸ் இல்லை

இந்தியாவின் தமிழகத்தில் இதுவரை "நிபா" வைரஸ் தொற்று தொடர்பில் எந்த விதமான பாதிப்புகளும் பதிவாகவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் பொதுமக்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

காய்ச்சல், தலைவலி, வாந்தி, தூக்கமின்மை, மூச்சுத்திணறல் அல்லது மயக்கம், வலிப்பு ஆகியன நோய்த் தொற்றுக்கான அறிகுறி எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரளாவின் பாலக்காடு மற்றும் மலப்புரம் மாவட்டங்களில் சமீபத்தில் நிபா வைரஸ் நோய் தாக்கங்கள் பதிவாகி உள்ளதைத் தொடர்ந்து, தமிழக அரசு நோய் நிலைமை குறித்து தீவிரமாகக் கண்காணித்து வருவதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.




# காசா மீது மீண்டும் போர் நடவடிக்கை

## தயாராகும் இஸ்ரேல்

60 நாள் போர் நிறுத்த பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தால் இஸ்ரேல், காசா மீது மீண்டும் போர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரித்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே நீண்ட நாள்களாகப் போர் இடம்பெற்று வருகிறது.

இந்நிலையில், ஹமாஸ் உடனான போரை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டு வருவதற்கான இஸ்ரேலின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு ஒப்பந்தம் உருவாக்கப்பட்டுள்ளது.

எனினும் முன்மொழியப்பட்ட 60 நாள் போர்நிறுத்தத்தின் கீழ் பேச்சுவார்த்தைகள் தோல்வியுற்றால், காசாவில் மீண்டும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள இஸ்ரேல் தயாராக இருப்பதாக பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.




# பஸ்ஸில் பயணம் செய்த 9 பேரை சுட்டுக் கொன்ற கிளர்ச்சியாளர்கள்

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில், பஸ்ஸில் பயணித்த 9 பேரை கிளர்ச்சியாளர்கள் சுட்டுக் கொலை செய்துள்ளனர்.

பாகிஸ்தானின் குவெட்டாவில் இருந்து லாகூர் சென்று கொண்டிருந்த பஸ்ஸில், துப்பாக்கியுடன் பிரவேசித்த துப்பாக்கித்தாரிகள், சில பயணிகளை கடத்தி அவர்களை சுட்டுக்கொன்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலியானவர்களின் சடலங்கள் குண்டுத் துளைத்த காயங்களுடன் மலையில் கண்டெடுக்கப்பட்டன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த துப்பாக்கி தாக்குதலுக்கான காரணம் இன்னும் வெளியாகவில்லை. அத்துடன் இந்த தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

கடந்த காலங்களில் இதே போன்ற சம்பவங்களின் பின்னணியில் பலூச் படையினர் தொடர்புகளை கொண்டிருந்தனர்.

இதன் காரணமாக, அவர்களே இந்த தாக்குதலிலும் ஈடுபட்டிருக்கலாம் என்று அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

# அகதிகளைப் பரிமாற்றும் பிரான்ஸ் - பிரித்தானியா



பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் ஆகிய இரு நாடுகளும் ‘One in, One out’ எனப்படும் புதிய திட்டத்தின் கீழ், அகதிகளை பரிமாற்றும் முயற்சியை தொடங்கியுள்ளன.

இது தொடர்பான உத்தியோக பூர்வ அறிவிப்பு நேற்று முன்தினம் வெளியானது.

பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மக்ரோனின் பிரித்தானிய விஜயத்தினை தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

சட்டவிரோத குடியேற்றத்தை தடுத்தல் மற்றும் அகதிகளை கட்டுப்படுத்தவே இத் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் கீழ், சிறு படகுகள் மூலம் இங்கிலாந்துக்குள் சட்டவிரோதமாக நுழையும் அகதிகள் பிரான்ஸ்’க்கு திருப்பி அனுப்பப்படவுள்ளனர்.

இதற்குப் பதிலாக, பிரான்ஸில் இருந்து அங்கீகாரம் பெற்ற சமமான எண்ணிக்கையிலான அகதிகளை, பாதுகாப்பு சோதனைகளுக்குப் பின்னர் பிரித்தானியா ஏற்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து வழியாக கடந்த சில ஆண்டுகான அதிகளவிலான புகலிடக்கோரிக்கையாளர்கள் வருகை தந்த வண்ணம் உள்ளனர். அத்துடன் குறித்த பகுதியில் ஆட்கடத்தல் உள்ளிட்ட சட்டவிரோத நடவடிக்கைகளும் இடம்பெற்று வருவதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையிலேயே குறித்த திட்டம் இன்னும் சில வாரங்களில் அமலுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த விடயம் உலக நாடுகள் மத்தியில் பெரும் பேசுபொருளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கதிர்காமத்தில் இறுதி நாள் மகாபெரஹரா

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் முருகன் ஆலய வருடாந்த ஆடிவேல் திருவிழாவையொட்டிய இறுதி நாள் பெரும் வீதியுலா (மகா பெரஹரா) சிறப்பாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு நடைபெற்றது. அங்கு நடைபெற்ற சில கலை அம்சங்களை காணலாம்.













# படுகாயமுற்ற தந்தை சிகிச்சைக் கட்டிலில் படுத்தபடி விபத்தில் உயிரிழந்த தன் சின்ன மகனுக்கு அஞ்சலி!

## நறுவிலிக்குளம் விபத்துத் தொடர்பில் பலரையும் கலங்க வைத்த படங்கள்



(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் – நானாட்டான் பிரதான வீதி, நறுவிலிக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த சிறுவனின் உடலை அந்த விபத்தில் படுகாயம் அடைந்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் அந்தச் சிறுவனின் தந்தை இறுதியாகப் பார்க்கும் படம் வெளியாகி பலரையும் சோகத்திற்கு உள்ளாக்கியுள்ளது.

மன்னார் – நானாட்டான் பிரதான வீதி, நறுவிலிக்குளம் பகுதியில் இருந்து மோட்டார் சைக்கிளில் தந்தை, தாய், மகன் மற்றும் மகள் ஆகிய நான்கு பேரும் நேற்று முன்தினம் வியாழன் மாலை நானாட்டான் நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது நானாட்டான் பிரதான வீதியூடாக மன்னார் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த பட்டா ரக வாகனம் மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்து நேர்ந்தது.

இதன் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த நான்கு பேரும் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டனர்.

எனினும் பலத்த காயங்களுக்கு உள்ளான 4 வயதுடைய சிறுவன் சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்தான்.

மேலும் பலத்த காயமடைந்த தந்தை,– தாய் மற்றும் 12 வயதுடைய சிறுமி ஆகிய மூவரும் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் 12 வயதுடைய சிறுமி மேலதிக சிகிச்சைக் காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சிறுவன் உயிரிழந்த சம்பவம் தந்தைக்கு தெரியாத நிலையில் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை மகன் இறந்த செய்தியைத் தந்தையிடம் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் பலத்த காயங்களுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வரும் தந்தை எழுந்து நடக்க முடியாத நிலையில் தனது நான்கு வயதுடைய மகனுக்கு வைத்தியசாலையில் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தியுள்ளார்.

இதுதொடர்பானபடங்கள்சமூகவலைத் தளங்களில் வெளியாகி உள்ளன.

உயிரிழந்த சிறுவனின் சடலம் இறுதிக் கிரியைகளுக்காக உறவினர்களிடம் கையளிக்கும் முன்னர் வைத்திய சாலையில் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வரும் தந்தைக்கு காண்பிக்கப்பட்ட நிலையில், தனது மகனின் உடலை தடவி தந்தை அஞ்சலி செலுத்தினார்.

அந்தப் படம் அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.



# மட்டு. பாலமீன்மடு ஆலய தீமிதிப்பு!

(பழுவூரான்)

மட்டக்களப்பு பாலமீன்மடு அருள் மிகு ஸ்ரீ சிவமுத்துமாரியம்மன் ஆலய தீமிதிப்பு நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிகாலை பறையோசை ஒலிக்க,பக்தர்களின் அரோகரா கோசங்களுக்கு மத்தியில், பக்திபூர்வமாக இடம்பெற்றது.

இதன்போது தேவாதிகள் மற்றும் பக்தர்கள் தமது நேர்த்திக்கடனை நிறைவேற்றும் பொருட்டு தீமிதிப்பில் ஈடுபட்டனர்.

இத்தீமிதிப்பில் கலந்து கொள்ளவென பாலமீன்மடு கிராமத்தை அண்டிய பிரதேசங்களிலிருந்து ஆயிரக்கணக்கானோர் வந்திருந்தனர்.

தீமிதிப்பைத் தொடர்ந்து நடைபெற்ற கும்பம் சொரிதலுடன் ஆலய வருடாந்த உற்சவம் நிறைவு பெற்றமை குறிப்பிடத்தக்கது.





# களுவங்கேணியில் பேச்சியம்மன் உற்சவத்தில் தெய்வம் ஆடியவர் மயங்கி வீழ்ந்து உயிரிழப்பு!

## இன்னொருவர் மீது கூரிய ஆயுதத்தால் குத்திவிட்டு தெய்வம் ஆடிய மற்றொருவர் தப்பி ஓட்டம்

(கனகராசா சரவணன்)

ஏறாவூர் களுவங்கேணி பிரதேசத்தில் பேச்சியமன் கோவிலில் இடம் பெற்ற வருடாந்த சடங்கின் போது தெய்வம் ஆடிய ஒருவர் திடீரென மயங்கிவீழ்ந்து உயிரிழந்தார். தெய்வம் ஆடிய மற்றொருவரோ இன்னொருவர் மீது கூரிய ஆயுதத்தால் குத்தியமையை அடுத்து அவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவங்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 9.30 மணிக்கு இடம்பெற்றதையடுத்து அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள களுவங்கேணி சிங்காரதோப்பு கிராமத்திலுள்ள பேச்சியம்மன் ஆலயத்தில் வருடாந்த திருவிழாவான இறுதி நாள் சடங்கு நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இடம்பெற்றது

இதன் போது பக்தர்கள் ஆலயத்தினுள் தெய்வம்ஆடிக் கொண்டிருந்தபோது 37 வயதுடைய நிமலன் என்பவர் திடீரெனமயங்கிவீழ்ந்தமையைஅடுத்துஅவர் அங்கேயே உயிரிழந்துள்ளார். இதனையடுத்து அங்கு தெய்வம் ஆடிக் கொண்டிருந்த இன்னொருவரோ மற்றொருவர் மீது கூரிய ஆயுதத்தால் தாக்குதல் நடத்தியதில் அவர் படுகாயமடைந்த நிலையில் மட்டு போதனா வைத்தியசாலை அனுமதிக்கப்பட்டார். தாக்குதலை மேற்கொண்டவர் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளம்சியை அடுத்து அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக செங்கலடி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# புதுக்குடியிருப்பில் உயிரிழந்த வர்த்தகர்களுக்கு நினைவேந்தல்

(பா.சதீசன்)

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் உயிரிழந்த வர்த்தகர்களுக்காக வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் நினைவேந்தல் நிகழ்வொன்று நேற்றுக் காலை நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத் தலைவர் த.நவநீதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வர்த்தகர்களின் குடும்பத்தினர்கள், வர்த்தகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள், ஓட்டோ உரிமையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

இதேவேளை இந்த நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக புதுக்குடியிருப்பு வர்த்தகர்கள் அனைவரும் தமது வர்த்தக நிலையங்களை மூடியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



















# வவுனியா தெற்கு மாணவர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று இலங்கை நாடாளுமன்றத்தை நேரில் பார்த்தனர்

(கி.வசந்தன்)

வவுனியா தெற்கு கல்சவிவலயத்தின் மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைப் பாராளுமன்றத்திறகு சென்று இன்று (11.07) அமர்வுகளை பார்வையிட்டு இருந்தனர்.

வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் இருந்து சென்ற இக் குழுவினரை வரவேற்ற தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன், நாடாளுமன்ற அமர்வு மற்றும் உட்கட்மைபு செயற்பாடுகள் தொடர்பில் பார்வையிடுவதற்கும், விளக்கங்களை வழங்குவதற்கும் மாணவர்களுக்கு ஏற்பாடு செய்து கொடுத்திருந்தார்.

இதன்போது வவுனியா தெற்கு வலய பிரதிக் பணிப்பாளர், உதவிக் கல்விப் பாணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், வவுனியா தெற்கு கல்வி வலய–த்தின் அதிகாரிகள், சமூக விஞ்ஞான பாட ஆசிரியர்கள் மற்றும் மாணவர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரில் நாடாளுமன்றத்தைப் பார்வையிட்டிருந்தனர்.

அங்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன், காதர் மஸ்தான் மற்றும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் ஆகியோர் அவர்களுடன் கலந்துரையாடி அவர்களுக்கான ஏற்பாடுகளையும் இலகுபடுத்திக் கொடுத்திருந்தனர்.










# இன்றைய ராசி பலன்கள் - 12.07.2025




இன்று உங்களிடம் விரைந்து முடிவெடுக்கும் திறன் காணப்படும். உங்கள் செயல்களில் வெற்றி பெற வேண்டும் என்ற ஆர்வம் இருக்கும். இந்தப் போக்கின் காரணமாக நீங்கள் நன்மை அடைவீர்கள்.

உங்கள் தனித்த திறன் உங்கள் செயல்திறனில் வெளிப்படும். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் உங்கள் விருப்பமான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிக்குமிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிப்பதை காண்பீர்கள். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று நீங்கள் சிறப்பான ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று பணிகள் சுமூகமாக நடக்காது. உங்கள் வளர்ச்சியில் தடைகள் காணப்படும். தகுந்த பலன்கள் கிடைக்காது. என்றாலும் கட்டுப்பாட்டுடன் சுமூகமாகச் செயல்களை செய்ய வேண்டும் ஆன்மீகத்தில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.

பணியிடத்தில் கடினமான சூழல் காணப்படும். பணிகள் அதிகமாக காணப்படும்.

இன்று உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பராமரிக்கும் சூழ்நிலை இருக்காது. சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் காணப்படும்.

மன உளைச்சல் காரணமாக இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. இசை கேட்பதன் மூலம் நீங்கள் ஆறுதல் பெறலாம்.




இன்று அதிகமான செயல்கள் காணப்படாது மனக் குழப்பத்தில் தவறான முடிவுகளை எடுப்பீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பணியிடத்தில் வளர்ச்சி குறைந்து காணப்படும். பணிகள் அதிகமாக காணப்படும்.பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க நீங்கள் திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்வதில் பிரச்சினைகள் ஏற்படும். அது இன்றைய நாளின் இனிமையை பாதிக்கும்.

இன்று பண வரவு காணப்படாது. முடிந்த அளவு சேமிக்க வேண்டும். என்றாலும் நீங்கள் கஷ்டங்களை எதிர்கொள்ள நேரும்.

கண்களில் உபாதை ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று வளர்ச்சி காணப்படும். இன்று நீங்கள் உங்கள் செயல்களில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் புத்திசாலித்தனத்தின் மூலம் நன்மை பெறுவீர்கள்.

இன்று நீங்கள் உங்கள் திறமைகளை பயன்படுத்தி செயலாற்றுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவீர்கள். உங்களின் இந்த நேரடி அணுகுமுறை காரணமாக நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த முடியும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். இன்று உங்கள் தேவைகளை சமாளிப்பீர்கள். புதிய முதலீட்டுக்கான முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.பிரார்தனை மேற்கொள்வதன் மூலம் சிறப்பாக உணர்வீர்கள்.




இன்று நீங்கள் தன்னம்பிக்கை, தைரியம் மற்றும் உறுதியுடன் செயல்பட வேண்டும். கடினமான சூழ்நிலைகளை நம்பிக்கையுடன் சமாளிக்க வேண்டும். தன்னம்பிக்கையை பராமரிக்க முயற்சி செய்ய வேண்டும்.

இன்று பணிகள் மும்மரமாக காணப்படும். பணிகளை செய்யும் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

சண்டைகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் தேவையற்ற வாக்குவாதங்களை தவிர்க்க வேண்டும். நீங்கள் அமைதியாக இருப்பதன் மூலம் எதிர்மறை விளைவுகளை சமாளிக்கலாம்.

பண இழப்பு காணப்படுகின்றது. தேவையற்ற செலவுகள் காரணமாக பணம் கரையும். பணத்தை கவனமாகப் பராமரிக்க வேண்டும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் முன்னேற்றத்தில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். எனவே உங்கள் செயல்களை சிறப்பாக திட்டமிட வேண்டும். இசை கேட்டல் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். இன்று நீங்கள் அதிக பொறுப்புகளை சுமக்க நேரும்.

உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சியை பராமரிக்க நீங்கள் அமைதியான சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

செலவுகள் அதிகமாக காணப்படும். கணிசமாக பணம் சேமிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

சளி மற்றும் இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று மகிழ்சிகரமான பலன்கள் கிடைக்காது. எனினும் எதிர்பாராத நன்மை கிடைக்க வாய்ப்புள்ளது. முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று பணிகள் அதிகரித்துக் கொண்டே இருப்பதைக் காண்பீர்கள். இன்று பொறுமையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

உங்கள் குழப்பமான எண்ணங்கள் காரணமாக உங்கள் துணையுடன் சில பிரச்சினைகள் ஏற்படும். அது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று பண இழப்பு காணப்படும். தேவையற்ற செலவுகள் உங்கள் கையிருப்பை கரைக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை சற்று குறைந்த அனுகூலமான நாள். தலைவலி வர வாய்ப்புள்ளதால் அமைதியை கடைபிடிப்பது நல்லது.




இன்று நன்மை நடக்கும் நாள். உங்கள் செயல்களில் வெற்றி காண்பீர்கள். விளையாட்டுப் போக்கில் இன்று உங்களுக்கு நன்மை கிடைக்கும்.

பணிகள் அதிகமாக காணப்பட்டாலும் நீங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். இன்று உங்கள் பணிகளை நீங்கள் நம்பிக்கையுடன் கையாள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவைப் பராமரிப்பீர்கள். உங்கள் குடும்பத்தில் நடக்கும் சுப நிகழ்ச்சியில் இருவரும் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு மகிழ்ச்சிகரமாக இருக்கும். இருக்கும் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

உங்கள் நேர்மறையான போக்கு காரணமாக இன்று சிறப்பான ஆரோக்கியம் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 12.07.2025




இன்று சிறப்பான நாள். உங்கள் இலட்சியங்கள் நிறைவேறும் நாள். புதிய தொடர்புகள் கிடைக்கும். நட்பு வட்டராம் விரிவடையும்.

பணியில் முன்னேற்றம் காணப்படும். உங்கள் செயல் திறன் கண்டு சக பணி யாளர்கள் பொறாமைப்படுவார்கள்பணியில் கிடைக்கும் புதிய வாய்ப்புகள் காரணமாக மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள் வீர்கள். உங்கள் அன்பை புரிந்து கொண்டு அவரும் பதில் அன்பு செலுத்துவார்.

இன்று பணம் அதிகமாக காணப்படும். உங்கள் சேமிப்பு கூடும் வாய்ப்பும் காணப்படுகின்றது.

நீங்கள் இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உற்சாகமும் ஆற்றலும் குறை யும்படியான சூழ்நிலை உருவாகும். குறைந்த எதிர்பார்ப்புடன் உங்கள் செயல்களை ஆற்றினால் வெற்றி கிடைக்கும்.

பணியிடச் சூழல் சாதகமாகஇருக் காது. பணிகள் அதிகமாக காணப்படுவதால் நீங்கள் சில சௌகரியங்களை இழக்க நேரும். இது உங்களுக்கு வருத்தத்தை உருவாக்கும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படாமல் நட்புடன் அணுக வேண்டும். இதனால் நல்லுறவை பராமரிக்க முடியும்.

பயணத்தின்போது பணம் இழக்கும் வாய்ப்பு காணப்படுகின்றது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

தோல் அரிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சாதகமான பலன்கள் கிடைக் காது. இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக அமைய உங்கள் புத்திசாலித் தனத்தை பயன்படுத்த வேண்டும்.

கவனமின்மை காரணமாக உங்கள் செயல் திறன் பாதிக்கப்படும். உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற சக பணியாளர்களின் ஆலோசனைகளைக் கேளுங்கள்.

தேவையற்ற மனக்குழப்பம் காரணமாக அற்ப விஷயங்களில் உங்கள் துணையிடம் குற்றம் கண்டு பிடிப்பீர்கள்.

பண வரவு சுமாராக இருக்கும். பணம் சம்பாதிப் பதற்கான வாய்ப்பும் குறைவு.

தோல் அரிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எண்ணெய் பதார்த்தங்களை உண்பதை தவிர்க்க வேண்டும்.




இன்று மகிழ்ச்சி நிறைந்து காணப் படும். இன்று அதிர்ஷ்டகரமான நாள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்க உகந்த நாள்.

பணியிடச் சூழல் உங்களுக்கு சாதக மாக இருக்கும். உங்களுக்கு கொடுக் கப்பட்ட பணிகளை விரும்பி செய்வீர்கள். உங்கள் திறமை மற்றும் கடின உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக் கும்.

உங்கள் மனநிலை சமநிலையில் இருக்கும். உங்கள் துணையிடம் அமைதியாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். பங்கு வர்த்த கத்தின் மூலம் நல்ல லாபமும் பண வரவும் காணப்படும்.

உங்களிடம் தைரியமும் உறுதியும் நிறைந்து காணப்படும்.

# வவுனியா தெற்கு வலயத்தைச் சேர்ந்த 70 ஆசிரியர்கள் வடக்கு மாகாணத்திலிருந்து வெளியேற விண்ணப்பம்!

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு



(வவுனியா நிருபர்)

வடக்கு மாகாணத்தில் இருந்து வவுனியா தெற்கு வலயத்தில் கற்பிக் கும் 70 ஆசிரியர்கள் வேறு மாகாணங் களுக்கு செல்ல விண்ணப்பித்துள்ள னர் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வவுனியா தெற்கு வலய செயலாளர் கி.வசந்தரூபன் தெரிவித் துள்ளார்.

வவுனியா தெற்கு வலயத்தின் ஆசி ரியர் இடமாற்ற சபைக் கூட்டம் தொடர் பில் ஊடகவியலாளர் இன்று எழுப் பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கை யில் –

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நடைமுறைக்கு வருவதற்கான இடமாற்றம் சம்பந்தமான இடமாற்ற சபை கூட்டங்கள் நடைபெற்று வருகி-ன்றன. குறிப்பாக வடக்கு மாகணத்தின் வவுனியா தெற்கு வலயத்தில் இருந்து 52 சிங்கள மொழி ஆசிரியர்களும், 18 தமிழ் மொழி மூல ஆசிரியர்களும் மாகா ணத்தை விட்டு வேறு மாகாணங் களுக்குச் செல்வதற்கு விண்ணப்பித் துள்ளனர். இந்த விண்ணப்பங்கள் மாகாண இடமாற்ற சபை ஊடாக விரைவில் பரிசீலிக்கப்படவுள்ளன.

அத்துடன், வடக்கு மாகாணத்தின் வலயங்களுக்கு இடையில் இடமாற்றம் பெறுவதற்கு வவுனியா தெற்கு வல யத்தில் இருந்து 22 தமிழ் மொழி மூல ஆசிரியர்களும், ஒரு சிங்கள மொழி மூல ஆசிரியருமாக 23 பேர் விண்ணப் பித்துள்ளனர். அதனை வவுனியா தெற்கு வலய இடமாற்ற சபை பரிசீல னைக்கு எடுத்துக் தீர்மானங்களை நிறைவேற்றிக் கொண்டுள்ளது. இத் தீர்மானங்கள் வடக்கு மாகாண கல் விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக் கப்பட்டு இறுதி முடிவுகள் வலய இடமாற்ற சபை தீர்மானத்தையும் கருத்தில் கொண்டு மாகாண இடமாற்ற சபை யால் மேற்கொள்ளப்பட்டு, சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு அது தொடர்பான தகவல்கள் அறிவிக்கப்படவுள்ளன. வலயத்திற்கு உட்பட்ட இடமாற்ற சபை விரைவில் கூட்டப்படவுள்ளது.

ஆசிரியர்கள் மாவட்டத்தில் காணப் பட்ட ஆசிரிய வெற்றிடங்களுக்கு ஏற்ப நியமிக்கப்பட்ட போதிலும், நியமன நிபந்தனைக் காலத்தை பூர்த்தி செய்யாது வலயத்தை விட்டு வெளியேற பல ஆசிரியர்கள் முயற்சி செய்து வரு கிறார்கள். இருப்பினும் வடமாகாண ஆசிரிய இடமாற்றக் கொள்கைக்கு அமைய ஆசிரியர்களினதும், மாண வர்களினதும் நலனை கருத்தில் கொண்டே இடமாற்ற சபையில் தீர்மா னங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்களுக்கான இடமாற்றங் களின் போது அவர்கள் இலகுவாகவும், வினைத்திறனுடனும், விருப்பத்துடனும் சென்று கற்பிக்கக் கூடிய வகையில் இடமாற்றங்கள் இடம் பெற வேண்டும். அதன் மூலமே வடக்கு மாகாணத்தில் சிறந்த பெறுபேற்றை பெற்றுக் கொள்ள முடியும்.

வெளியாகிய க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் வடக்கு மாகாணம் 9 ஆவது நிலையில் உள்ளது. அதற்கு ஆசிரியர் வளப் பங்கீடுகள் சரியான முறையில் பகிர்ந்தளிக்கப்படாமையும் ஒரு காரணம் என்பதை மறுத்து விட முடியாது. – எனவும் தெரிவித்தார்.